போலி சான்றிதழ் தயாரித்த 5 பேர் கும்பல் கைது

பெங்களூர், மே 6– நாடு முழுக்க இயங்கி வரும் பல்வேறு பிரபல மற்றும் முன்னணி கல்வி நிறுவனங்களின் போலி சான்றிதழ்களை தயாரித்து வழங்கியதாக 5 பேர் கும்பலை போலீசார் கைது செய்துள்ளனர்.

கடந்த 4 ஆண்டுகளாக இவர்கள் தயாரித்து வழங்கிய சான்றிதழ்களை கொண்டு வேலைவாய்ப்பு, மேற்படிப்பு உள்ளிட்டவற்றிற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து 1,500 போலி சான்றிதழ்கள் கைப்பற்றப்பட்டுள்ள நிலையில் இவை அனைத்தும் உத்திரப்பிரதேசம், குஜராத் மற்றும் தமிழ் நாட்டை சேர்ந்த வெவ்வேறு பல்கலைக்கழகங்கள் மற்றும் பள்ளிகளை சேர்ந்தது என தெரிவிக்கப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டவர்களுக்கு நாடு முழுக்க கிட்டத்தட்ட 1 லட்சத்து 60 ஆயிரம் வாடிக்கையாளர்கள் இருப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

பிடிப்பட்ட கும்பலுக்கு தொடர்புடைய ஏஜெண்ட்கள் நாடு முழுக்க இருப்பதாகவும், இவர்களில் 180 பேரின் தகவல்கள் ஏற்கனவே சேகரிக்கப்பட்டு விட்டது. இவர்கள் தயாரிக்கும் போலி சான்றிதழ்கள்15 ஆயிரம் முதல் 1 லட்ச ரூபாய் வரையிலான தொகைக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

ஈராக்கில் ராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் ஐ.எஸ். தீவிரவாதிகள் 23 பேர் பலி

பாக்தாத், மே 6– ஈராக்கில் ராணுவத்தினர் நடத்திய அதிரடி தாக்குதலில் ஐ.எஸ். பயங்கரவாதிகள் 23 பேர் கொல்லப்பட்டனர்.

ஈராக்கில்ஐ.எஸ். பயங்கரவாதிகளின் பிடியில் இருந்து மொசூல் நகரின் கிழக்கு பகுதியை ராணுவம் கடந்த ஜனவரி மாதம் மீட்டது.

அதைத் தொடர்ந்து மேற்கு பகுதியையும் ஐ.எஸ். பயங்கரவாதிகளிடம் இருந்து தங்கள் வசப்படுத்துவதற்காக ராணுவம் கடுமையாக சண்டையிட்டு வருகிறது.

இந்த சண்டை தற்போது உக்கிரம் அடைந்துள்ளது. ஈராக் படைகள் தொடர்ந்து முன்னேறி வருகின்றன.

தற்போதைய நிலவரப்படி மேற்கு மொசூலில் 70 சதவீதத்துக்கும் மேற்பட்ட பகுதிகளை ராணுவம் தன் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து விட்டது என அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

இந்த நிலையில் அங்கு 3 கிராமங்களை ஐ.எஸ். பயங்கரவாதிகளின் பிடியில் இருந்து போலீஸ் படை மீட்டுள்ளது. அப்போது நடந்த மோதலில் ஐ.எஸ். பயங்கரவாதிகள் 23 பேர் கொல்லப்பட்டனர்.

இந்த தகவலை மத்திய போலீஸ் தலைவர் சாகர் ஜாவ்தத் தெரிவித்தார். தற்போது போலீஸ் படை, ஹராமத் பகுதியை முற்றுகையிட்டு வருவதாக அவர் கூறினார்.

இதற்கிடையே அங்குள்ள ஜாஞ்ஜிலி மாவட்டத்தில் ஐ.எஸ். பயங்கரவாதிகளின் அலுவலகத்தை முற்றுகையிட்டு போலீசார் தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் அந்த இயக்கத்தின் முக்கிய தளபதிகளில் ஒருவரான ஹசன் கோமா உள்ளிட்ட 8 பேர் உயிரிழந்தனர்.

பெயர் மாற்றம்

ADHITHIYA GHATTI, தந்தை பெயர்: Ashok Ghatty, பிறந்த தேதி: 11.10.1989, ப்ளாட் எண்.8, 4/9, மகாலட்சுமி அபார்ட்மெண்ட்ஸ், முதல் மெயின் ரோடு, காந்தி நகர், அடையார், சென்னை–600020, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **ADITYA GHATTY**, என்று அழைக்கப்படுகிறேன்.

ADHITHIYA GHATTI

‘பாகுபலி–2’ ரிலீசான முதல் வாரத்தில் மொத்த வசூல் ரூ.834 கோடி

சாதனைகளை முறியடித்து வெற்றிநடை

மும்பை, மே 6– இந்திய திரையுலகில் முந்தைய சாதனைகள் அனைத்தையும் முறியடித்து மாபெரும் புதிய சாதனையை ராஜமவுலியின் ‘பாகுபலி–2’ படம் ஒரே வாரத்தில் படைத்திருக்கிறது. இந்தியாவில் ஒட்டுமொத்தமாக ரூ.679 கோடியும், வெளிநாடுகளில் ரூ.155 கோடியும் வசூலாகியுள்ளது. ஆகமொத்தம் வசூல் ரூ.834 கோடி வசூலாகியுள்ளது.

இதற்குமுன் இந்திய அளவில் அமீர்கான் நடித்த ‘தங்கல்’ படம் தான் ரூ.700 கோடி வசூலித்து முதலிடத்தில் இருந்தது. அதுவும் அந்தப்படம் ஓடிய மொத்த நாட்களின் வசூல். ஆனால் ‘பாகுபலி–2’ படம் ஒரே வாரத்தில் அந்த சாதனையை முறியடித்து ரூ.800 கோடிக்கும் அதிகமாக சாதனையை வசூலித்தது.

அடுத்த 2 நாட்களும் விடுமுறை என்பதால் மேலும் ரூ.200 கோடியை வசூலித்து 10 நாட்களுக்குள் ரூ.1000 கோடி வசூலாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

குறிப்பாக நேரடி, இந்திப் படங்களின் வசூலை ஒரு தெலுங்கு டப்பிங் முறியடித்துள்ளது என்பதை இந்தப் படஉலகின் முன்னணி நடிகர்களை பொறாமைப்பட வைத்திருக்கிறது.

இந்தியாவில் மட்டும் ‘பாகுபலி–2’ இந்தி டப்பிங் படத்தின் வசூல் ரூ.250 கோடித் தொட்டிருக்கிறது. அடுத்த நாட்களில் அதிகமாகி இந்திய வசூலில் ரூ.300 கோடியை கடந்துள்ள ‘தங்கல்’ பஜ்ரங்கி பைஜான், சுல்தான், பிகே ஆகிய படங்களுடன் ரூ.300 கிளப்பில் இணைந்துவிடும்.

ஆந்திரா, தெலுங்கானா ஆகிய மாநிலங்களில் ரூ.170 கோடியும், தமிழ்நாடு, கர்நாடகா மாநிலங்களில் தலா ரூ.62 கோடியும், கேரளாவில் ரூ.33 கோடியும், அமெரிக்காவில் ரூ.85 கோடியும் மற்ற நாடுகளில் சுமார் ரூ.75 கோடியும் மற்ற உலக நாடுகளில் சுமார் ரூ.100 கோடி வரையிலும் வசூலாகியுள்ளதாக ஒரு தகவல் கூறுகிறது.

கோடை விடுமுறை – பள்ளி கல்லூரிகள் விடுமுறை என்பதால் எப்படியும் இந்த மாதம் முழுவதும் பாகுபலி–2 வசூல் நிறைவாகவே இருக்கும் என்பதால் படத்தின் வசூல் ரூ.1500 கோடியை தாண்ட வாய்ப்புகள் அதிகம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

10 ஆண்டுகளில் சூப்பர் டூப்பர் ஹிட்

கடந்த 10 ஆண்டுகளில் இந்தியில் ஒரு படம், இந்த அளவுக்கு வசூலில் சாதனை படைத்து, சூப்பர் டூப்பர் ஹிட், என்ற பெருமையைப் பெற்றது ‘பாகுபலி–2’ தான்.

‘பாகுபலி–2’ல் பிரபாஸ், ராணா, சத்யராஜ், நாசர், ரம்யாகிருஷ்ணன், அனுஷ்கா, தமன்னா ஆகியோர் நடித்துள்ளனர்.

மத்திய அரசின் ஆயுஷ் அமைச்சகம், தமிழ்நாடு அரசு மற்றும் இந்திய தொழில் கூட்டமைப்பு இணைந்து நடத்தும் 4 நாட்கள் நடைபெறும் தேசிய ஆரோக்கிய கண்காட்சியை, அமைச்சர் சி.விஜயபாஸ்கர் துவக்கிவைத்தார். உடன் இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறை ஆணையர் மோகன் பியாரே, இந்திய தொழில் கூட்டமைப்பு நிர்வாகிகள் உள்ளனர்.

அண்ணா தி.மு.க. ஆட்சி தொடரும்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அணிகள் இணைப்பு நடக்கும். நெடு நாள் பயணம் போனவர்கள் யாரும் வெற்றி பெற்றதாக வரலாறு இல்லை. இவர்கள் வீட்டிற்கு போவார்கள் என்று செங்கோட்டையன் தெரிவித்தார்.

திண்டுக்கல் சீனிவாசன்

சேலத்தில் அமைச்சர் திண்டுக்கல் சீனிவாசன் நிருபர்களிடம் பேசுகையில், அம்மாவின் ஆட்சி தொடரும், இரட்டை இலை சின்னத்தை மீட்போம். பேச்சு வார்த்தை நடத்த எங்கள் தரப்பில் எப்போதும் தயாராக இருக்கிறோம் என்று கூறினார்.

விஷமத்தனம்

தமிழகத்தில் விரைவில் பொது தேர்தல் வரும் என்று முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர் செல்வம் தெரிவித்திருப்பது விஷமத்தனமானது என்று நிதி அமைச்சர் ஜெயக்குமார் கூறினார்.

திருமணமாகும் ஏழை பெண்களுக்கு 'தாலிக்கு தங்கம்' உள்ளிட்ட நல திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று சென்னை தியாகராய நகரில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உதவிகளை வழங்கிய நிதி அமைச்சர் ஜெயக்குமார் பின்னர் செய்தியாளர்களை சந்தித்தார்.

ஜெயலலிதா முதலமைச்சராக இருந்த போது அறிவித்த நல திட்டங்களை மக்களுக்கு கொண்டு சேர்பதில் தற்போதைய அரசு முனைப்புடன் செயல்பட்டு வருவதாக ஜெயக்குமார் தெரிவித்தார். ஜெயலலிதாவின் அரசாகவே இந்த அரசு இருப்பதாகவும், இது தொடர வேண்டும் என்று அனைத்து அதிமுக தொண்டர்களும் விரும்புவதாக கூறிய அவர், தமிழகத்திற்கு விரைவில் தேர்தல் வரும் என்று பன்னீர் செல்வம் தெரிவித்திருப்பது அண்ணா திமுக தொண்டர்களின் எண்ணத்திற்கு எதிரானது என்றார். அதே சமயம்அந்த கருத்து விஷமத்தனமானது என்றும் ஜெயக்குமார் கூறினார்.

எதிர்கட்சி தலைவர் ஸ்டாலின், துணை தலைவர் துரைமுருகன், ஓ.பன்னீர் செல்வம் உள்ளிட்டோர் தெரிவிப்பது போன்று தமிழகத்திற்கு விரைவில் தேர்தல் வருவதற்கான வாய்ப்புகள் இல்லை என்று ஜெயக்குமார் கூறினார். யார் எத்தனை முறை கூறினாலும் முறைப்படி ஆட்சி காலத்தை தற்போதைய அரசு நிறைவு செய்து வரும் 2021ம் ஆண்டு தான் தமிழகத்திற்கு தேர்தல் வரும் என்றும் ஜெயக்குமார் தெரிவித்தார்.

இரு அணிகள் பேச்சுவார்த்தைக்கு கதவுகள் திறந்தே இருக்கிறது. சிறு துளி பெரு வெள்ளம் என்பார்கள். எங்களை பொறுத்தவரை யாரையும் இழக்க விரும்பவில்லை. எம்.ஜி.ஆர்., அம்மா காட்டிய பாதையில், அனைவரையும் அரவணைத்து செல்ல தயாராக இருக்கிறோம் என்று ஜெயக்குமார் கூறினார்.

ஜெயலலிதா மரணம் குறித்து சிபிஐ விசாரணை வேண்டும் என்று ஓ.பன்னீர்செல்வம் இப்போது கூறுகிறார். அவர் முதலமைச்சராக இருந்தபோதே இதனை செய்திருக்கலாமே. இப்போது இப்படி கேட்பது சந்தர்ப்பவாதம். இந்த அரசியல் எல்லாம் மக்கள் மத்தியில் எடுபடாது என்று அமைச்சர் ஜெயக்குமார் கூறினார்.

இந்த அரசு செயல்படாத அரசு என்று மு.க.ஸ்டாலின் கூறியுள்ளாரே என்று கேட்டதற்கு அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாகவும், தானும் இருக்கிறேன் என்பதை காட்ட அவ்வப்போது இதுபோன்று ஏதாவது அவர் கூறுவார். இதெல்லாம் மக்கள் மத்தியில் எடுபடாது என்று அமைச்சர் ஜெயக்குமார் கூறினார்.

மின்சாரம் தாக்கி உயிரிழந்த 15 பேர் குடும்பத்துக்கு தலா ரூ.3 லட்சம்

முதல்வர் எடப்பாடி பழனிசாமி உத்தரவு

சென்னை, மே.6– பல்வேறு சம்பவங்களில் மின்சாரம் தாக்கி உயிரிழந்த 15 பேர் குடும்பத்துக்கு தலா 3 லட்சம் ரூபாய் நிதி உதவி வழங்க முதல்வர் எடப்பாடி பழனிசாமி உத்தரவிட்டுள்ளார்.

இதுகுறித்து எடப்பாடி பழனிசாமி இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் வட்டம், காட்டாங்கொளத்தூரைச் சேர்ந்த, மின்பாதை ஆய்வாளராக பணிபுரிந்து வந்த கன்னியப்பன் என்பவரின் மகன் மு.சேகர்; செய்யூர் வட்டம், பவுஞ்சூர் கிராமத்தைச் சேர்ந்த நடேச நாயக்கர் என்பவரின் மகன் கோவிந்தராஜ்;

விழுப்புரம் மாவட்டம், பில்லூர் கிராமத்தைச் சேர்ந்த ராமசாமி என்பவரின் மகன் சண்முகம்; கிருஷ்ணகிரி மாவட்டம், சாமல்பட்டி தரப்பு மற்றும் கிராமத்தைச் சேர்ந்த சகாதேவன் என்பவரின் மகன் ஆசைத்தம்பி;

மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், தும்பக்குளம் கிராமத்தைச் சேர்ந்த சக்கணன்;

ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், ஆப்பக்கூடல் கிராமத்தைச் சேர்ந்த, மின்வாரிய கள உதவியாளராகப் பணிபுரிந்து வந்த சங்கீதா என்பவரின் கணவர் சித்தையன்;

மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், கொட்டாம்பட்டி, மணப்பச்சேரி கிராமத்தைச் சேர்ந்த முத்துகிருஷ்ணன் என்பவரின் மகன் செல்வன் யுவராஜா;

திருவண்ணாமலை மாவட்டம், வெம்பாக்கம் வட்டம், திருப்பனங்காடு கிராமத்தைச் சேர்ந்த, போர்மேன் ஆக பணிபுரிந்து வந்த முத்துலட்சமி என்பவரின் கணவர் வாசுதேவன்;

கோயம்புத்தூர் மாவட்டம் பொள்ளாச்சி வட்டம், ஆனைமலை கிராமத்தைச் சேர்ந்த குப்புசாமி என்பவரின் மகன் குமார்;

நீலகிரி மாவட்டம், பந்தலூர் வட்டம் மூனனாடு கிராமத்தைச் சேர்ந்த சாக்கோ என்பவரின் மகன் சிபி;

குந்தா வட்டம், கீழ்குந்தா கிராமத்தைச் சேர்ந்த, மின்வாரியத்தில் தற்காலிக தொழிலாளராக பணிசெய்து கொண்டிருந்த தங்கவேல் என்பவரின் மகன் குணசேகரன்;

சிறுமி

கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், மதுசூதனபுரம் கிராமத்தைச் சேர்ந்த நாகராஜன் என்பவரின் மகள் சிறுமி மகிமா;

தஞ்சாவூர் மாவட்டம், பெரம்பூர் சரகம், ஆலக்குடி கிராமத்தைச் சேர்ந்த ஆழகுராஜ் என்பவரின் மனைவி செல்வசுந்தரி;

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், மண்ணிவாக்கம் கிராமத்தில் வாலாஜாபாத் ரோடு, படப்பை மின் துணை நிலையத்தில் பணியில் ஈடுபட்டிருந்த முத்தன் என்பவரின் மகன் மாயக்கண்ணன்;

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், தண்டலம் கிராமத்தில் உள்ள மின்சார அலுவலகத்தில் பணிபுரிந்து வந்த திருவள்ளூர் மாவட்டம், ஈக்காடு கிராமம், விசுவாசபுரத்தைச் சேர்ந்த ஜகநாத முதலியார் என்பவரின் மகன் ஜானகிராமன்;

ஆகியோர் மின்சாரம் தாக்கியதில் உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

மின்சாரம் தாக்கி உயிரிழந்த மேற்கண்ட 15 நபர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதலமைச்சர் எடப்பாடி கே.பழனிசாமி கூறியுள்ளார்.

பெயர் மாற்றம்

GAJENDIRAN, தந்தை பெயர்: Rajagopal Mudaliar, பிறந்த தேதி: 01.07.1956, எண்.97/5, பிள்ளையார் கோயில் தெரு, கொசவன்பாளையம், திருப்பாசூர் திருவள்ளூர் – 631203, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **GAJENDRAN**, என்று அழைக்கப்படுகிறேன்.

GAJENDIRAN

பெயர் மாற்றம்

BASKER VANGIVAKKAM SHANMUGAM, தந்தை பெயர்: Vangivakkam Shanmugam, பிறந்த தேதி: 19.12.1962, ப.எண்.268, பு.எண்.498, மிண்ட் தெரு, பார்க் டவுன், சென்னை – 600 003, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **BHASKAR**, என்று அழைக்கப் படுகிறேன்.

BASKER VANGIVAKKAM SHANMUGAM

பெயர் மாற்றம்

VADIVUBHARATHI THANIGACHALAM, கணவர் பெயர்: Manoj Thiruchelvam, பிறந்த தேதி: 13.02.1992, எண்.10–A, கணேஷ் நகர், கொடுங்கையூர், சென்னை–600 118, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **BHARATHI THANIGACHALAM**, என்று அழைக்கப்படுகிறேன்.

VADIVUBHARATHI THANIGACHALAM

பெயர் மாற்றம்

J.MOHAMMED SADIQ BASHA, தந்தை பெயர்: Jaffar / Shamshath, பிறந்த தேதி: 13.11.1998, ப.எண்.2/2, பு.எண்.7, நாகாத்தம்மன் கோயில் சந்து, ராயபுரம், சென்னை – 600 013, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **J.SADIQ BASHA JAFFAR / SHAMSHATH**, என்று அழைக்கப்படுகிறேன்.

J.MOHAMMED SADIQ BASHA

பெயர் மாற்றம்

N.THIRUMURUGAN, தந்தை பெயர்: P.Narayanasami, பிறந்த தேதி: 12.06.1993, எண்.19/190, மெயின் ரோடு, Thogamalai, குளித்தலை தாலுக்கா, கரூர் மாவட்டம்– என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **N.ABDUR RAHIM**, என்று அழைக்கப்படுகிறேன்.

N.THIRUMURUGAN

பாஸ்போர்ட் காணவில்லை

இதன் மூலம் பொது மக்களுக்கு தெரிவிப்பது என்னவென்றால் எனது பாஸ்போர்ட் எண். K 4345492 சென்னை ரீஜினல் பாஸ்போர்ட் அதிகாரி அவர்களால் 15.03.2013 அன்று வழங்கப்பட்டது. மேற்படி பாஸ்போர்ட் தொலைந்து விட்டது. இதை கண்டெடுத்தவர்கள் எனது கீழ்கண்ட முகவரிக்கு தகவல் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

I.SHARMILI,
No.5, S1, Second Floor,
Masha Alla Flats,
Kamaraj Salai,
Virugambakkam,
Chennai–600 092.

TVS SRICHAKRA LIMITED

TVS BUILDING, 7 WEST VELI STREET, MADURAI – 625 001.

NOTICE OF LOSS OF SHARE CERTIFICATES

Notice is hereby given that the following Share Certificates issued by the Company are stated to have been lost/misplaced (with or without transfer deeds) and the registered/bonafied holders thereof has applied to the Company for the issue of Duplicate Share Certificates.

FOLIO_NO.	NAME OF THE HOLDER	CERT_NOs.	FR_DIST NOs.	TO_DIST NOs.	SHARES
21942	MRS S LAKSHMY	22416	912626	912650	25
21942	MRS S LAKSHMY	42647	2172902	2172951	50
21942	MRS S LAKSHMY	74008	3842181-	3842230	50
21942	MRS S LAKSHMY	130774	5862997	5863046	50
21942	MRS S LAKSHMY	130775	5863047	5863071	25

The public is hereby warned against purchasing or dealing in any way with the above Share Certificates. Any person who has any claim in respect of the said Share Certificates should lodge such claim with the Company at its registered office at the address given above within 15 days of publication of this notice, after which no claim will be entertained and the Company will proceed to issue Duplicate Share Certificates in favour of the registered holder.

Place : Madurai
Date : 06/05/2017

TVS SRICHAKRA LIMITED
P Srinivasan
Secretary

தமிழ்நாடு அரசு

பொதுப்பணித்துறை

கட்டடம் (கட்டுமானம் & பராமரிப்பு) கோட்டம்–மருத்துவப் பணிகள், வேலூர்.6

ஒப்பந்தப்புள்ளி அழைப்பு எண்: 04/2016–2017/வபி/இ.வ.அ/கோ.100மருத்துவப்பணிகள் நாள்:02.05.2017

தமிழ்நாடு ஆளுநருக்காவும் அவர் சார்பாகவும், செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டம், மருத்துவப்பணிகள், வேலூர்.6 அவர்களால் கீழ்காணும் பணிக்களுக்கு 17.05.2017 அன்று அலுவலக நேரப்படி 15.00 மணிவரையில் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பொதுப்பணித்துறையில் பதிவு செய்துள்ள தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாளில் 15.30 மணியளவில் வந்திருக்கும் ஒப்பந்தக்காரர் அவர்களது முகவர்கள் முன்னிலையில் திறக்கப்படும். ஒப்பந்தப்புள்ளி படிவம் வேலூர் பொ.பது., (க&ப) கோட்டம், மருத்துவப்பணிகள், செயற்பொறியாளர் அலவலகத்தில் 02.05.2017 முதல் 16.05.2017–17.45 மணி வரையிலும் விற்பனைக்கு கிடைக்கும்.

வ. எண்.	பணியின் பெயர்	முன் வைப்புத் தொகை (ரூபாயில்)	பணி முடிக்க வேண்டிய காலம்	ஒப்பந்தப்புள்ளி படிவத்தின் விலை (ரூபாயில்)	ஒப்பந்தக்காரர் தகுதி
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
	மொத்த தொகை–சதவீத ஒப்பந்த முறை				
1.	கடலூர் மாவட்டம் – விருதாசலம் அரசு மருத்துவமனையில் பிரசவத்திற்கு முன் தங்கும் வார்டு கட்டும் பணி. (பணி மதிப்பு ரூ.13.95 இலட்சங்கள்)	ரூ.14,000/–	4 மாதங்கள்	ரூ.6000 + வாட் ரூ.300/–	வகுப்பு 4–ம் அதற்கு மேலும்.
2.	கடலூர் மாவட்டம் – காட்டுமன்னார் கோயில் அரசு மருத்துவமனையில் பிணவறை கட்டும் பணி. (பணி மதிப்பு ரூ.18.60 இலட்சங்கள்)	ரூ.18,600/–	4 மாதங்கள்	ரூ.6000 + வாட் ரூ.300/–	வகுப்பு 4–ம் அதற்கு மேலும்.

பணி முடிக்க வேண்டிய காலம் : 4 மாதங்கள்.

ஒப்பந்தப்புள்ளி படிவத்தின் விலை : Rs.6000/– + VAT Rs.300/–

ஒப்பந்தப்புள்ளி படிவம் பெற : 0059 Cash Remittance PW III Other Receipts

பணம் செலுத்த வேண்டிய தலைப்பு (D.P.Code No.0059–80–800–AC–0107)

மதிப்பு கூட்டு வரி செலுத்த : 0040 Sales Tax VAT General Sales Tax

வேண்டிய கணக்குத் தலைப்பு (D.P.Code No.0040–00–111–Aa–0003

ஒப்பந்தப்புள்ளி படிவத்தின் விலை மற்றும் முன் வைப்புத் தொகை ஆகியவை செயற்பொறியாளர், பொ.பது., கட்டட (க&ப) கோட்டம், மருத்துவப்பணிகள், வேலூர் அவர்களின் பெயரில் வரவு வைக்கப்பட வேண்டும்.

இதர விவரங்கள் மற்றும் விடுமுறைகளை வேலூர் கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டம், மருத்தவப்பணிகள், செயற்பொறியாளர் அலுவலகத்தில் தெரிந்து கொள்ளலாம்.

செயற்பொறியாளர், பொ.பது.,
கட்டட (க&ப) கோட்டம், மருத்துவப்பணிகள்,
வேலூர்–6.

வெ.ஆ.எண்: 111/ செ.மா.தொ.அ/கடலூர்,நாள்: 05.05.2017

எக்விடாஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 410'A', 4வதுமாடி, ஸ்பென்சர் ப்ளாசா, ஃபேஸ் II, எண். 769, மவுண்ட் ரோடு, அண்ணாசாலை, சென்னை 2

CIN: U65100TN2007PLC064069 | Ph: 044 4299 5000 | www.equitas.in

மார்ச் 31, 2017 வரை முடிவடைந்த மூன்று மாத மற்றும் ஆண்டிற்கான தனிப்பட்ட மற்றும் ஒட்டு மொத்த தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகள்

(₹ லட்சத்தில்)

வ. எண்	விபரங்கள்	தனிப்பட்ட முடிவுகள்				ஒட்டு மொத்த முடிவுகள்			
		முடிவடைந்த மூன்று மாதங்கள் 31 மார்ச் 2017	முடிவடைந்த ஆண்டு 31 மார்ச் 2017	முடிவடைந்த ஆண்டு 31 மார்ச் 2016	முடிவடைந்த மூன்று மாதங்கள் 31 மார்ச் 2016	முடிவடைந்த மூன்று மாதங்கள் 31 மார்ச் 2017	முடிவடைந்த ஆண்டு 31 மார்ச் 2017	முடிவடைந்த ஆண்டு 31 மார்ச் 2016	முடிவடைந்த மூன்று மாதங்கள் 31 மார்ச் 2016
		தணிக்கை செய்யப்பட்டது	தணிக்கை செய்யப்பட்டது	தணிக்கை செய்யப்பட்டது	தணிக்கை செய்யப்பட்டது	தணிக்கை செய்யப்பட்டது	தணிக்கை செய்யப்பட்டது	தணிக்கை செய்யப்பட்டது	தணிக்கை செய்யப்பட்டது
1	செயலாக்கங்களிலிருந்து மொத்த வருமானம்	323.71	1,229.59	819.72	154.85	39,796.84	155,435.80	111,093.14	31,958.32
2	இக்காலம் / ஆண்டுக்குரிய நிகர இலாபம் வரி, மற்றும் வழக்கத்திற்கு மாறான / அசாதாரண வகைகளுக்கு முன்	253.74	750.30	384.06	62.58	1,095.39	26,263.41	26,011.96	7,290.24
3	இக்காலம் / ஆண்டுக்குரிய நிகர இலாபம் வரிக்கு முன் மற்றும் வழக்கத்திற்கு மாறான / அசாதாரண வகைகளுக்குப் பின்	253.74	750.30	384.06	62.58	1,095.39	25,156.09	26,011.96	7,290.24
4	இக்காலம் / ஆண்டுக்குரிய நிகர இலாபம் வரி, வழக்கத்திற்கு மாறான / அசாதாரண வகைகளுக்குப் பின்	181.01	468.17	211.63	30.55	690.60	15,936.57	16,714.18	4,677.34
5	சமபங்கு மூலதனம்	33,781.37	33,781.37	26,992.04	26,992.04	33,781.37	33,781.37	26,992.04	26,992.04
6	காப்புநிதிகள் மறுமதிப்பீட்டு காப்புநிதிகள் தவிர்த்து (முந்தைய ஆண்டின் இருப்பு நிலை அறிக்கையில் காண்பித்துள்ளபடி)	–	133,728.36	69,158.54	–	–	189,279.00	107,143.23	–
7	தொடரும் மற்றும் நிறுத்தப்பட்ட செயலாக்கங்கள் ஈட்டிய பங்கு ஒன்றுக்கான வருவாய் – மூன்று மாதங்கள்/ ஆண்டு முடிவில்								
(i)	அடிப்படை (₹)	0.05	0.14	0.08	0.01	0.20	4.79	6.21	1.73
(ii)	குறைமதிப்பு (₹)	0.05	0.14	0.08	0.01	0.20	4.69	6.19	1.73

குறிப்பு: மேற்குறிப்படப்பட்டவைகள் செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015-ன், விதி 33-ன் படி பங்கு வர்த்தக நிறுவனத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மூன்று மாதங்களுக்கான / ஆண்டிற்கான தணிக்கை செய்யப்பட்ட முழுவடிவிலான நிதிநிலை முடிவுகளின் சுருக்கப்பட்ட வடிவம் ஆகும். மூன்று மாதங்களுக்கான / ஆண்டிற்கான நிதிநிலை முடிவுகளின் முழு படிவமும் நிறுவனத்தின் **www.equitas.in** என்ற இணையதளத்திலும், பங்குவர்த்தக நிறுவனத்தின் **www.nseindia.com, www.bseindia.com** என்ற இணையதளங்களிலும் காணலாம்.

இயக்குனர்கள் குழு சார்பாக
sd. S பாஸ்கர்
செயல் இயக்குனர் மற்றும் தலைமை செயல் அதிகாரி

இடம் : சென்னை
தேதி : 5 மே 2017